**செய்தி வெளியீடு எண் : 2524** **நாள் : 15.12.2023**

**மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் மிக்ஜாம் புயலினால் விபத்து மரணமடைந்த தொழிலாளர் திரு.ஆர்.ஜெயசீலன் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டு தொகை ரூ.15,49,625/– மற்றும் திரு.எஸ்.நரேஷ் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டு தொகை ரூ.16,85,000/–ற்கான உத்தரவுகள் வழங்கினார்.**

மிக்ஜாம் புயலினால் பெய்த கனமழையின் காரணமாக சென்னை–32 வேளச்சேரியில் மெசர்ஸ்.இந்துஜா லேலண்ட் பைனான்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் கட்டுமான பணிக்காக கிரீன் டெக் ஸ்ட்ரக்சுரல் கன்ஸ்டரக்ஷன் என்ற ஒப்பந்ததாரர் நிறுவனம் EarthWork செய்யும் பணி மேற்கொண்டு வந்ததாகவும், இப்பகுதியில் கடந்த 04.12.2023 காலை 7.00 மணியளவில் திடீரென மண்சரிவு ஏற்பட்டதாகவும், இதனால் ஏற்பட்ட பள்ளத்தில் கிரீன் டெக் ஸ்ட்ரக்சுரல் கன்ஸ்டரக்ஷன் என்ற நிறுவனத்தின் உதவி மின் பொறியாளர் திரு.ஆர்.ஜெயசீலன் மற்றும் கட்டுமானப் பணியை ஒட்டி அமைந்திருந்த கேஸ் பங்கின் EB Room–ல் இருந்த கேஸ் பங்க் ஊழியர் திரு.எஸ்.நரேஷ் (வயது 21) த/பெ.சங்கர் என்பவர் அந்த கட்டிடத்துடன் பள்ளத்தில் மூழ்கிவிட்டனர். பின்னர் மழைநீர் வடிந்த பின் 08.12.2023 அன்று இருவரும் பிணமாக மீட்கப்பட்டனர். மாண்புமிகு தொழிலாளர் மற்றம் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இவ்விரு தொழிலாளர்களின் பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து சென்னை, தொழிலாளர் இணை ஆணையர்–1 அவர்கள் முன்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு 1923 ஆம் ஆண்டு பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் திரு.ஆர்.ஜெயசீலன் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.15,49,625/–ம் திரு.எஸ்.நரேஷ் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.16,85,000/–ம் பெற்று தர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் இன்று (15.12.2023) தலைமை செயலகத்தில், சென்னை, வேளச்சேரியில் மிக்ஜாம் புயலினால் விபத்து மரணமடைந்த தொழிலாளர்களுக்கு பணியின்போது ஏற்பட்ட விபத்து மரணத்திற்கான இழப்பீட்டு தொகை ரூ.15,49,625/–க்கான உத்தரவு திரு.ஆர்.ஜெயசீலன் அவர்களின் மனைவி திருமதி.மஞ்சு அவர்களிடமும் இழப்பீட்டு தொகை ரூ.16,85,000/–க்கான உத்தரவு திரு.எஸ்.நரேஷ் அவர்களின் தந்தை திரு.கே.சங்கர் அவர்களிடமும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த், இ.ஆ.ப., அவர்கள், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர், திரு.பொன்.குமார் அவர்கள் சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி. சி. ஹேமலதா மற்றும் தொழிலாளர் இணை ஆணையர்–1 திரு.தே.விமலநாதன் ஆகியோர் உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in